DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் செவ்வாய்கிழமை 6ம் நாள் சாட்சியாகிய விஜய்குமார் என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விஜய்குமார் | வயது | 45 |
| த/பெ. | வெங்கடபதி | இனம் | ஆண் |
| கிராமம் | சென்னை | தொழில் | வேலை இல்லை |
| சமயம் | | தாலூக்கா | |

**M.C.17/2018**

(மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜர். மனுதாரர் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்)

**குறுக்கு விசாரணை மனுதாரர் தரப்பில் 06.05.2025 எ.சா.1**

1. நான் சொந்தமாக தொழில் செய்கிறேனா என்றால் இல்லை. அயப்பாக்கத்தில் உள்ள எண்.29 கேம்ப் ரோட்டில் உள்ள ஸ்ரீராம் மெடிக்கல் எனக்கு சொந்தமானது என்றால் இல்லை. சாட்சியிடம் மெடிக்கலின் பதிவு சான்றை காண்பித்து கேள்வி வினவியபோது அவர் பெயரில் பதிவு சான்று வழங்கப்பட்டுள்ளதாகவும், அந்த கடை அடமானத்தில் உள்ளதாக தெரிவித்தார். என்னிடம் காட்டப்படும் தகவல் அறிவும் உரிமை சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தகவல் ஸ்ரீராம் மெடிக்கல் சம்மந்தப்பட்டது என்றால் சரிதான். (திருவள்ளூர் உதவி மருந்து கட்டுப்பாட்டு பொது தகவல் அதிகாரி வழங்கிய தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழான பதில் ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).

2. என்னிடம் காட்டப்படம் புகைப்படத்தில் உள்ள நபர் நான் தான் என்றால் சரிதான். (புகைப்படம் ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது). ஸ்ரீராம் மெடிக்கல் கடையின் செயல் அதிகாரி நான்தான் என்று என்று கூகுள் வலைதளத்தில் பதிவு செய்துள்ளேன் என்றால் ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் கூகுள் படிவத்தில் குறிப்பிட்டுள்ள ஸ்ரீராம் மெடிக்கல்ஸ் தளத்தில் தகவல்கள் ஸ்ரீராம் மெடிக்கல்ஸ் சம்மந்தப்பட்டது என்றால் சரிதான். (கூகுள் வலைதளத்தில் இருந்து எடுக்கப்பட்ட பிரிண்ட அவுட் நகல் ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது). 2018 ம் வருடத்தில் இருந்து ஸ்ரீராம் மெடிக்கல் செயல்பட்டு வருகிறது என்றால் இல்லை. கடந்த இரண்டு

வருடமாக செயல்பட்டு வருகிறது. கூகுள் வலைதளத்தில் ஸ்ரீராம் மெடிக்கல் சம்மந்தப்பட்ட தகவல்கள் நான் பதிவு செய்தது என்றால் யார் வேண்டுமானாலும் பதிவு செய்யலாம்.

3. 2023ம் வருடத்தில் இருந்து நான் மேற்படி மெடிக்கல்ஸ் கடைக்கு GST வரி செலுத்தி வருகிறேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் ஸ்ரீராம் மெடிக்கல்ஸ் 2023–2024ம் வருட GST தாக்கல் செய்த விவரங்கள் அடங்கிய ஆவணங்கள் என்றால் சரிதான். (ஸ்ரீராம் மெடிக்கல்ஸ் 2023–2024 வருடத்திற்கான GST வரி செலுத்தியதற்கான ஆவண நகல் ம.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது). என்னிடம் காட்டப்படும் ஆவணம் 2024–2025 வருடத்திற்கான GST தாக்கல் செய்த விவரங்கள் அடங்கிய ஆவணங்கள் என்றால் சரிதான். (ஸ்ரீராம் மெடிக்கல்ஸ் 2024–2025 வருடத்திற்கான GST வரி செலுத்தியதற்கான ஆவண நகல் ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது). GST ஆவணத்தில் மாத வருமானம் 3லட்சம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை.

4. நான் தான் ஸ்ரீராம் மெடிக்கல்ஸ் கடையின் உரிமையாளர் என்றாலும் வழக்கிற்காக அடமானத்தில் உள்ளது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் மருந்துகளை தவிர மருத்துவ உபகரணங்களை விற்பனை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனது பெற்றோருக்கு ஒரே மகன் என்றால் சரிதான். எனக்கு இரண்டு சகோதரிகள் உள்ளனர். நானும் மனுதாரரும் 10,12 வருடங்களாக பிரிந்து வாழ்கிறோம் என்றால் 2010ம் வருடத்தில் இருந்து பிரிந்து வாழ்ந்து வருகிறோம். எனக்கு மகன் உள்ளார் என்றால் சரிதான். எனது மகன், மனைவிக்கு பொருளாதார உதவிகள் கடந்த 10 வருடமாக செய்து உள்ளேனா என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து மனஉளைச்சலால் எனக்கு வருமானம் இல்லை அதனால் நான் பொருளாதார உதவி எதுவும் செய்யவில்லை.

5. எனக்கு மெடிக்கல் கடை மூலம் போதுமான வருமானம் உள்ளது என்றால் சரியல்ல. நான் வசித்து வரும் வீடு சொந்த வீடு என்றால் எனது பெற்றோருக்கு சொந்தமானது.

**குறுக்கு விசாரணை எதிரி தரப்பில்:**

2. எதிரி வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை வேறுதேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.